# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 279/2016 |
| நாள் | 23.07.2025 |
| வா.சா.2 | கனகராஜ் |
| வயது | 37 |
| ஊர் | குஜிலியம்பாறை |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வண்டி வாடகைக்கு ஓட்டிவருகீறேன். நான் எம்.பி.ஏ வரை படித்துள்ளேன். எனக்கு சொத்து சம்பந்தமான ஆவணங்கள் தயாரிக்கும் வேலை இல்லை என்றால் சரிதான். உயில் ஆவணத்தை எழுதுவதற்கு உண்டான விவரங்களை எனது நண்பர் ஜீவரத்தினம் என்பவர் கூறினார். அவர் திண்டுக்கல்லில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். வா.த.சா.ஆ.12 உயில்ஆவணத்தை நான் ஏன் மேற்படி ஜீவரத்தினம் வழககறிஞரை வைத்து தயார் செய்யவில்லை என்றால் தொகை செலவாகும் என்பதால் நானே தயார் செய்து கொண்டேன். பொதுவாக ஆவணம் எழுதுவதற்கு உண்டான அனுபவம் இருந்தால் தான் அந்த ஆவணத்தை முறைப்படி தயார் செய்யமுடியும் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.12 உயில் ஆவணம் முத்திரைத்தாளில் எழுதவில்லை. நான் வா.சா.1 அன்னலெட்சுமியின்மகளை திருமணம் செய்தேனா என்றால் ஆமாம். ஆனால், உயில் ஆவணம் தயார் செய்த போது அவரை திருமணம் செய்யவில்லை. உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள அங்கமுத்து என்பவர் வா.சா.1ன் சகோதரர் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் மற்றொரு சாட்சியான சுப்ரமணியம் என்பவர் வா.சா.1ன் சித்தப்பா என்றால் சரிதான். வா.த.சா.ஆ.12 உயில் ஆவணம் எழுதிய போது வா.சா.1

அன்னலெட்சுமி உடனிருந்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் 1வது வாதி சிதம்பரத்திடையது அல்ல என்றால் சரியல்ல. 1வது வாதி சிதம்பரம் இறந்த பின்னிட்டு, நானும், வா.சா.1, அங்கமுத்து, 3,4 வாதிகள் மற்றும் சுப்ரமணியம் ஆகியோர் கூட்டாக சேர்ந்து வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தை போலியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. 1வது வாதி சிதம்பரம் முறைப்படி உயில் ஆவணம் எழுதி வைத்திருந்தால் சார் பதிவாளர் அலுவலகம் சென்று உயில் ஆவணத்தை முறைப்படி பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. நான் எனது திருமணத்திற்கு பின்னிட்டு வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தை போலியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனது மனைவிக்கு பாகம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பு சட்டப்படி ஏற்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.